அபிராமி தாயே !

பாடலாசிரியர்: ஸ்ரீதேவிபிரசாத்

******************

அமாவாசை இரவினிலே முழுநிலவாய் வந்தாயே !

அன்புடனே பக்தனுயிர் காத்திடவே நீயே ! (2)

திருக்கட வூர்வாழும்

அருட் கடல் ஆனவளே ! (2)

தருவதிலே கற்பகமே!

தயைபுரிவாய் இக்கணமே!

chorus:

அபிராமி ! தாயே! சரணம் ! சரணம் !

அபிராமி ! தாயே! சரணம் ! சரணம் ! (2)

சரணம் 1

உதிக்கின்ற செங்கதிராய்..

துதித்துன்னை தொழுதவரும்..

திதிதன்னை தவறாக

சொன்ன தென்ன? (2)

கதியென்று உனைப்புகழ்ந்து

அந்தாதி பாட..முழு

மதியாக நீவந்து

அருள் செய்ததென்ன ! (2)

மதிகெட்ட எனக்கிங்கு, நன்மதியும் நிம்மதியும

தந்திடவே வருவாயோ இன்று? நன்மதியைத் தருவாயோ இன்று?

PSDPRASAD MUSIC

அபிராமி தாயே !

பாடலாசிரியர்: ஸ்ரீதேவிபிரசாத்

*****************

சரணம் ௨

எந்தனகம் சூழ்ந்துள்ள
அஞ்ஞான இருள் நீக்கி
மெய்ஞான ஒளிதன்னை
அருள்வ தென்றோ?

சந்தமுடன் எப்பொழுதும்
செந்தமிழில் உனைப்பாடி
வந்தனங்கள் நான் செய்ய
வரம் தருவதென்றோ?(௨)

அபிராமி பட்டர்க்கு அருள்செய்தாய் அதுபோலுன்..
அபிமான பக்தர்க்கும் அருள் செய்தல் என்றோ?

அபிமான பக்தர்க்கும் அருள் செய்தல் என்றோ?

PSDPRASAD MUSIC